**D–7353**

**Sub. Code**
**31911**

DISTANCE EDUCATION

M.A. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2022.

First Semester

இக்கால இலக்கியம்

(CBCS – 2018-19 Academic Year onwards)

Time : Three hours — Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளி.

1. வந்தே மாதரம் என்பதன் பொருள் தருக.

2. குடும்பவிளக்கில் 'தலைவி' இரவினை எவ்வாறு வரவேற்கின்றாள்?

3. பழங்காலத் தமிழ் நாடக வகைகளைக் குறிப்பிடுக.

4. ஜெயந்தனின் படைப்புகள் குறித்து கி. ராஜநாராயணன் யாது கூறுகின்றார்?

5. புதுமைப்பித்தனின் இயற்பெயர் என்ன? அவர் எங்கு பிறந்தார்?

6. ஜெயகாந்தன் எழுதிப்புகழ் பெற்ற நான்கு நாவல்களைச் சுட்டுக.

7. கி. ராஜநாராயணனின் படைப்புகளின் தனிச் சிறப்பு யாது?

8. மண்ணுதின்னி ரெங்கண்ண நாயக்கர் – பெயர்க்காரணம் தருக.

9. 'நாவல் பேரரசி' – யார்? அவர் பெற்ற விருதின் பெயர் என்ன?

10. என்றும் இளையராய் வாழ எத்தகைய உள்ளம் வேண்டும் என்று திரு.வி.க. குறிப்பிடுகிறார்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளி.

11. (அ) பாரதியின் தமிழ் உணர்வினைச் 'செந்தமிழ் நாடெனும்' எனும் கவிதை கொண்டு எழுதுக.

(அல்லது)

(ஆ) நா. காமராசனின் 'கருப்பு மலர்கள்' கவிதை உணர்த்தும் கருத்தினைக் கூறுக.

12. (அ) ஐக்கூவின் இயல்புகள் குறித்து நீவிர் அறிந்தனவற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) 'ஒரு கதவும் கொஞ்சம் கள்ளிப்பாலும்' வெளிப்படுத்தும் மனிதநேயச் சிந்தனையைக் கூறுக.

13. (அ) தமிழ் நாடக முன்னோடிகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பிரபஞ்சனின் 'முட்டை' கதைமாந்தர் பண்புநலன்களைக் கூறுக.

14. (அ) ஜெயந்தனின் நினைக்கப்படும் சிறுகதையின் கதைச்சுருக்கம் தருக.

(அல்லது)

(ஆ) கோபல்ல கிராமத்தின் சிறப்பம்சங்களாக கி. ராஜநாராயணன் சுட்டுவனவற்றை எழுதுக.

15. (அ) தனிக்குடித்தனச் சிக்கல்கள் குறித்துக் 'கரைந்தவர்கள்' சிறுகதை சுட்டும் செய்திகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) அனுராதா ரமணன் 'சிறை' உணர்த்தும் சமூகப் பின்புலம் குறித்து எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் விடையளிக்க.

16. 'குடும்பவிளக்கில்' பெண்ணின் கடமைகளாகப் பாரதிதாசன் கூறுவனவற்றை தொகுத்துரைக்க.

17. அண்ணாவின் 'வேலைக்காரி ஒரு சீர்த்திருத்த நாடகம்' என்பார் கூற்றை ஆய்க.

18. கடவுளும் கந்தசாமி பிள்ளையும் கதை உணர்த்தும் தனிமனித சிக்கலை விவரிக்க.

19. தி. ஜானகிராமனின், 'சிலிர்ப்பு' சிறுகதையில் குழந்தை தொழிலாளர் நிலை சித்திரிக்கப்படும் விதத்தினை விளக்கியுரைக்க.

20. முருகன் அல்லது அழகு என்னும் நூலின் வழி திரு.வி.க.வின் நடைக்கூறுகளைப் புலப்படுத்துக.

———————

| D–7354 |
|---|

| Sub. Code |
|---|
| 31912 |

DISTANCE EDUCATION

M.A. DEGREE EXAMINATION, DECEMBER 2022.

First Semester

Tamil

அற இலக்கியங்களும் சமய இலக்கியங்களும்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

1. பசும்புல் தலை காண்பது அரிது – எப்போது?
2. கடையாயார், இடையாயார், தலையாயார் நட்பு எத்தகையது?
3. யாருக்கு அபாயம் ஒரு நாளும் இல்லையென ஔவையார் கூறுகிறார்?
4. திருநீற்றுப்பதிகம் யாருடைய நோயை நீக்குவதற்காகப் பாடப்பட்டது?
5. சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்பவர் பெறும் பயனாக மணிவாசகர் குறிப்பிடுவது யாது?
6. இல்லதும் உள்ளதும் அல்லது என குலசேகராழ்வார் எதனைக் குறிப்பிடுகிறார்?
7. உயர்வற உயர்நலம் உடையவன் யார்?
8. மருதிடங் கொண்ட ஒரு தனிக் கடவுள் யார்?
9. தெய்வமணிமாலை எனும் நூல் யார் மீது பாடப்பட்டது?
10. ஆசியஜோதி எனும் நூலின் மூல நூல் எது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளி.

11\. (அ) மழையின் இன்றியமையாமையை வான்சிறப்பு அதிகாரம் எவ்வாறு வலியுறுத்துகின்றது?

(அல்லது)

(ஆ) நீத்தார் பெருமையைத் திருக்குறள் வழி நின்று விளக்குக.

12\. (அ) நாலடியார் சுட்டும் கூடா நட்பினைப் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) "ஔவையார் காட்டும் நல்வழிகளைக் கடைப்பிடித்தால் வாழ்வாங்கு வாழலாம்" – இக்கூற்றை மெய்ப்பிக்க.

13\. (அ) திருநீற்றின் பெருமையைத் திருஞானசம்பந்தர் எவ்வாறு பாடுகின்றார்?

(அல்லது)

(ஆ) நாச்சியார் திருமொழியில் ஆண்டாள் கண்ட திருமணக் கனவை விளக்குக.

14\. (அ) குணங்குடி மஸ்தான் சாகிபு பராபரக்கண்ணியில் அல்லாவிடம் வேண்டுவன யாவை?

(அல்லது)

(ஆ) திருவிடை மருதூர் மும்மணிக்கோவை எவற்றை உணர்த்துகின்றது?

15\. (அ) கந்தகோட்டத்து முருகப்பெருமானை வள்ளலார் எவ்வாறு போற்றுகின்றார்?

(அல்லது)

(ஆ) குலசேகராழ்வார் திருவேங்கடமுடையானிடம் பிறவி வேண்டி நிற்கும் பாங்கினை விவரி.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் <u>மூன்று</u> வினாக்களுக்கு விடையளி.

16. குறிப்பறிதல் மற்றும் புணர்ச்சி மகிழ்தல் அதிகாரங்களில் தமிழரின் அகவாழ்வு சித்திரிக்கப்பட்டுள்ள தன்மையைப் புலப்படுத்துக.

17. கல்வி கற்றோர் அடையும் சிறப்புகளையும் கல்லாதோர் எய்தும் இழிவுகளையும் பழமொழி நானூறு வழி நின்று எடுத்துரைக்க.

18. மாணிக்கவாசகரின் சிவபுராணம் உணர்த்தும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

19. பரிபூரணானந்தத்தில் தாயுமானவர் இறைவனின் அருட்பேராற்றலை எவ்வாறு அறிவிக்கின்றார்? விளக்குக.

20. திருமந்திரம் காட்டும் அறம் செய்வோரின் சிறப்பினையும் அறம் செய்யாதவனின் அழிவையும் புலப்படுத்துக.

---

**D–7355**

| Sub. Code |
|---|
| **31913** |

DISTANCE EDUCATION

M.A. (Tamil) DEGREE EXAMINATION, DECEMBER 2022.

First Semester

இலக்கணம் — I — தொல்காப்பியம் எழுத்ததிகாரம்-இளம்பூரணம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. மகர குறுக்கம் என்பது யாது?

2. "ரகார ழகாரம் குற்றொற் றாகா" - விளக்குக.

3. குற்றெழுத்துகள் பெறும் சாரியைகள் யாவை?

4. மொழி ஈறாகும் மெய்கள் யாவை?

5. "குற்றிய லுகரக் கின்னே சாரியை" – விளக்கம் தருக.

6. அழன், புழன் என்பன பெறும் சாரியைகளைக் குறிப்பிடுக.

7. பனி என்னும் சொல் பெறும் சாரியைகள் குறித்து எழுதுக.

8. "அங்கை" – புணர்ச்சி விதி தருக.

9. தாய் என்னும் சொல் வருமொழியுடன் எவ்வாறு புணரும்?

10. "இருதிசை புணரின் ஏயிடை வருமே" – சான்றுடன் விளக்குக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

11. (அ) உயிர்மெய் எழுத்தின் வடிவமும் மாத்திரையும் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) போலி எழுத்துகள் குறித்துத் தொல்காப்பியர் உரைப்பன யாவை?

12. (அ) சார்பெழுத்துப் பிறப்பு குறித்து எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) ணள, னல ஆகிய மெய்களின் முன் தகர நகர மெய்கள் வந்து புணருமாற்றை விளக்குக.

13. (அ) "ஐகார வேற்றுமைத் திரிபென மொழிப" – விளக்குக.

(அல்லது)

(ஆ) அத்து, வற்று ஆகிய சாரியைகள் வரும் இடங்களையும், பெறும் மாற்றங்களையும் குறிப்பிடுக.

14. (அ) தாம், நாம், யாம் என்பன உருபு புணர்ச்சியில் எய்தும் மாற்றங்களை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) இயல்பாகும் ஆகார ஈற்றுச் சொற்கள் குறித்து எழுதுக.

15. (அ) "சாத்தந்தை" என்பதற்கான புணர்ச்சி விதியைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) "உண்டு" என்னும் சொல் வருமொழியுடன் புணரும் வகை குறித்து எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விரிவான விடை தருக.

16. மொழி முதலாகும் எழுத்துகள் குறித்துத் தொல்காப்பியர் வழி நின்று விளக்குக.

17. மெய்யெழுத்துப் பிறப்புக் குறித்து வகைப்படுத்தி உரைக்க.

18. இகர ஈற்றுச் சொற்கள் குறித்த புணர்ச்சி விதிகளைத் தொகுத்தெழுதுக.

19. மகர ஈற்றுச் சொற்கள் வருமொழியுடன் புணருமாற்றை எடுத்துரைக்க.

20. ஒன்று முதலான எண்ணுப்பெயர்களுடன், நூறு, ஆயிரம் ஆகியன வருமொழியாகிப் புணருமாற்றை விவரிக்க.

———————

**D–7356**

| **Sub. Code** |
|---|
| **31914** |

DISTANCE EDUCATION

M.A. (Tamil) DEGREE EXAMINATION,
DECEMBER 2022.

First Semester

இலக்கியத் திறனாய்வியல்

(CBCS 2018 – 2019 Academic year onwards)

Time : Three hours                    Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. Criticism என்னும் சொல்லைக் கலைச் சொல்லாகக் கையாண்டவர் யார்?

2. திறனாய்வாளன் அடிப்படையாகத் தெரிந்திருக்கவேண்டிய கோட்பாடுகளைச் சுட்டுக.

3. தொல்காப்பியம் கூறும் இலக்கியத்துக்குரிய பாடுபொருட்களைச் சுட்டுக.

4. கம்பராமாயணத்தை உலகக் காப்பியங்களுடன் ஒப்பிட்ட அறிஞர் யார்?

5. பாராட்டு முறைத் திறனாய்வு என்றால் என்ன?

6. உலகியற் கற்பனை-வரையறுக்க.

7. உணர்ச்சியைப் பற்றித் தொல்காப்பியம் எவ்வியலில் விரிவாகப் பேசும்?

8. பாவினங்கள் எனப்படுபவை யாவை?

9. குறியீட்டியல் என்றால் என்ன?

10. உளப்பகுப்பாய்வு முறையின் தந்தை யார்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

11. (அ) திறனாய்வின் பயன்களை விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) தமிழில் திறனாய்வின் தோற்றத்தை விளக்கியுரைக்க.

12. (அ) விதிமுறைத் திறனாய்வின் பண்புகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) பாராட்டு முறைத் திறனாய்வின் அடிப்படைகள் யாவை?

13. (அ) கற்பனை குறித்த மேனாட்டார் கருத்துக்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) இலக்கியமும் உணர்ச்சியும் என்பது குறித்தெழுதுக.

14. (அ) எண்வகை மெய்ப்பாடுகள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) காலந்தோறும் அறக்கோட்பாட்டு வளர்ச்சியை விளக்குக.

15. (அ) செவ்வியல் ஆய்வு என்பதை விளக்குக.

(அல்லது)

(ஆ) குறியீட்டியற் கொள்கைகளை விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க.

16. தொல்காப்பியத்தில் காணலாகும் திறனாய்வுப் போக்குகள் குறித்துக் கட்டுரைக்க.

17. திறனாய்வின் வகைகள் குறித்துக் கட்டுரை வரைக.

18. கற்பனையின் வகைப்பாடு பற்றி விளக்கியுரைக்க.

19. ஒலிநயமும் உணர்ச்சியும் கொண்ட இயைபு குறித்து விளக்குக.

20. தொல்படிமவியல் ஆய்வு குறித்து விளக்கியெழுதுக.

———————

**D–7357**

| Sub. Code |
|---|
| **31921** |

DISTANCE EDUCATION

M.A. DEGREE EXAMINATION, DECEMBER 2022.

Second Semester

Tamil

இலக்கணம் 2 — தொல்காப்பியம் சொல்லதிகாரம் – சேனாவரையம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

1. அன்மைக் கிளவியாவது யாது?

2. "மன்னாப் பொருளும் அன்ன இயற்றே" – விளக்குக.

3. ஐந்தாம் வேற்றுமை உருபும் பொருளும் குறித்து எழுதுக.

4. கொடை எதிர் கிளவியாவது யாது?

5. முறைப்பெயர் விளியேற்குமாற்றைச் சுட்டுக.

6. "ஒருவர்" என்னும் பெயரின் இயல்பினைக் குறிப்பிடுக.

7. ஒன்றன்பால் விகுதிகள் யாவை?

8. "கொன்" என்னும் இடைச்சொல்லின் பொருள்கள் யாவை?

9. தெவு, தெவ்வு என்பன தரும் பொருள்களை எழுதுக.

10. திரிசொல்லின் இலக்கணத்தை எடுத்துரைக்க.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) செப்பு வழுவமைதி குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) முன்னத்தின் உணரும் கிளவிகள் குறித்து விளக்குக.

12. (அ) இரண்டாம் வேற்றுமை உருபும் பொருல் பாகுபாடும் குறித்து எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) ஆகுபெயரின் இலக்கணமும் வகைப்பாடும் குறித்து எழுதுக.

13. (அ) உயர்திணைப் புள்ளியீறுகள் விளியேற்குமாற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) தொல்காப்பியர் குறிப்பிடும் அஃறிணைப் பெயர்களைத் தொகுத்தெழுதுக.

14. (அ) விரவுவினை குறித்து எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) எண்ணிடைச் சொற்கள் குறித்து விளக்குக.

15. (அ) உரிச்சொல்லின் இலக்கணமும் பாகுபாடும் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) மொழிபுணர் இயல்பு குறித்து விளக்குக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விரிவான விடை தருக.

16. திணை பால், வழாநிலை, வழுவமைதி குறித்து விளக்குக.

17. விரவுப் பெயர் வகைகளை விவரிக்க.

18. காலமயக்கம் குறித்து எடுத்துரைக்க.

19. தொடர்மொழி நிலை குறித்துத் தொல்காப்பியர் வழி விளக்குக.

20. சேனாவரையரின் தடை விடை நடை நுட்பத்தைச் சான்றுடன் எடுத்துரைக்க.

————————

| D–7358 |
|---|

| Sub. Code |
|---|
| **31922** |

DISTANCE EDUCATION

M.A. DEGREE EXAMINATION, DECEMBER 2022.

Second Semester

Tamil

தமிழர் பண்பாடும் கலையும்

(CBCS 2018 – 2019 Academic year onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

1. தமிழக நிலங்கள், கடவுளர் வரிசைப்படுத்துக.

2. பன்னிரு ஆழ்வார்கள் பெயர்களைச் சுட்டுக.

3. புதிய கற்காலக் கருவிகள் தழிகத்தில் கிடைக்குமிடங்கள் எவை?

4. சங்ககாலப் பாணர் வகைகளை எழுதுக.

5. இசைத்தமிழ் நூல்கள் நான்கினைச் சுட்டுக.

6. பதினோராடல்கள் எவை?

7. மெய்ப்பாட்டியல் குறிப்பிடும் மெய்ப்பாடுகள் எத்தனை? அவை யாவை?

8. கோயில்-குறிப்பு வரைக.

9. தமிழகத்தில் ஓவியத்தால் பெயர்பெற்ற இடங்களைக் குறிப்பிடுக.

10. நால்வகைச் சிற்பங்கள் எனப்படுபவை யாவை?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடை தருக.

11. (அ) தமிழர் பண்பாட்டில் இசுலாத்தின் பங்களிப்பை விவரிக்க.

(அல்லது)

(ஆ) தமிழர் பண்பாட்டில் கிறித்துவத்தின் பங்களிப்பை விவரிக்க.

12. (அ) மராட்டியர் பண்பாடாக அறியப்படுவன யாவை?

(அல்லது)

(ஆ) சங்ககால இசைக்கருவிகள், அவற்றின் பயன்பாடு குறித்தெழுதுக.

13. (அ) தமிழிசைச் சங்க வரலாற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) சங்ககாலக் கூத்துகள் பற்றி விவரிக்க.

14. (அ) சிலப்பதிகாரம் காட்டும் நாடகமேடை குறித்த செய்திகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) முதலாழ்வார்கள் பாடிய திருத்தலப் பெருமைகளை எடுத்துரைக்க.

15. (அ) மதுரை நாயக்கர் கால ஓவியங்களின் சிறப்புகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) செப்புத் திருமேனிகளின் அமைப்புச் சிறப்பை விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விரிவான விடையளிக்க.

16. இந்திய நாகரிகத்தில் தமிழர் பண்பாட்டுக் கூறுகள் சிறப்பிடம் பெறும்விதத்தை நிரூபிக்க.

17. தமிழகக் கூத்துக்கலை குறித்து விரிவாக எழுதுக.

18. இருபதாம் நூற்றாண்டு நாடக வரலாறு எனும் தலைப்பில் கட்டுரை வரைக.

19. 'தமிழ் மன்னர்கள் ஓவியக்கலையைப் போற்றினர்' - இக்கூற்றை நிரூபிக்க.

20. பல்லவர்களின் கலை ஈடுபாட்டை விவரிக்க.

———————

| D–7359 |
|---|

| Sub. Code |
|---|
| 31923 |

DISTANCE EDUCATION

M.A. DEGREE EXAMINATION, DECEMBER 2022.

Second Semester

Tamil

திறனாய்வுக் கோட்பாடு

(CBCS 2018-19 Academic Year Onwards)

Time : Three hours                                   Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

1. புதுத்திறனாய்வின் அடிப்படைகள் எவை?

2. இலக்கியத்தை வரலாற்று மூலமாகக் கொள்ளமுடியுமா?

3. மொழியின் புதை, புற வடிவங்கள் என்பன எவை?

4. மார்க்சியத் திறனாய்வில் அடித்தளம் என்பது யாது?

5. பெண்ணியத்தின் பல்வேறு போக்குகள் எவை?

6. ஒடிபஸ் மனச்சிக்கல் - விளக்கு.

7. நவீனத்துவம் என்றால் என்ன?

8. பூக்கோவின் ஆய்வு முறை என்ன?

9. எடுத்துரைபியல் ஆய்வில் காலம் என்பதை விளக்கு.

10. புலம்பெயர் சமூகத்தின் பொதுக் கூறுகள் எவை?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) பின்காலனித்துவ ஆய்வு முறையியலை விளக்கு.

(அல்லது)

(ஆ) சமுதாய மதிப்பு என்பதை விளக்கு.

12. (அ) பிரதிபலிப்புக் கொள்கை என்றால் என்ன?

(அல்லது)

(ஆ) ரோமன் யாக்கப்சனின் ஆய்வு முறையியல் என்ன?

13. (அ) உளவியல் அணுகுமுறை என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) அமைப்பியலின் முக்கியத்துவத்தை விளக்கு.

14. (அ) மொழிக்கிடங்கு - பேச்சுமொழி வேறுபாட்டை விளக்குக.

(அல்லது)

(ஆ) கதையாடல் என்றால் என்ன?

15. (அ) பின்காலனித்துவ ஆய்வு முறையியலை விளக்கு.

(அல்லது)

(ஆ) சூழலியல் ஆய்வு முறையின் முக்கியத்துவத்தை விளக்குக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

ஏதேனும் -மூன்று வினாக்களுக்கு விரிவான விடையளிக்க.

16. இலக்கிய வரலாற்றெழுதியல் குறித்து ஒரு கட்டுரை வரைக.

17. சமூகவியல் திறனாய்வின் பல்வேறு கூறுகளை விவரிக்க.

18. தலித் இலக்கியத் திறனாய்வு முறையை விளக்கி அதன் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.

19. தொன்மத் திறனாய்வை விவரி.

20. அமைப்பியலில் இருந்து பின் அமைப்பியல் வெறுபடுமிடங்களை விளக்குக.

---

**D–7360**

**Sub. Code**
**31924**

DISTANCE EDUCATION

M.A. DEGREE EXAMINATION, DECEMBER 2022.

Second Semester

Tamil

கல்வெட்டியல்

(CBCS 2018-19 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

1. கல்வெட்டு படியெடுக்க உதவும் பொருட்கள் யாவை?
2. கல்வெட்டுகள் இடம்பெற்ற இடங்கள் எவை?
3. நடுகல் நடும் முறையைக் குறிப்பிடுக.
4. திருப்பரங்குன்றக் கல்வெட்டு குறித்துள்ள செய்தி யாது?
5. மராட்டிய கல்வெட்டு அமைப்பைக் குறிப்பிடுக.
6. சாசனங்கள் - குறிப்பு வரைக.
7. சிந்துவெளி முத்திரைகள் எவை?
8. எந்தெந்த மன்னர்கள் காலங்களில் தமிழ்க்கல்வெட்டுகள் எழுதப்பட்டுள்ளன?
9. கிடைக்கப்பெற்ற கல்வெட்டுகள் கணக்கிடப்படும் காலமுறைகளை எழுதுக.
10. குறியீடுகள் - குறிப்பு வரைக.

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) கல்வெட்டுக்ள எங்ஙனம் எவற்றால் எழுதப்படுகின்றன?

(அல்லது)

(ஆ) கல்வெட்டுகளின் அமைப்பு முறையை விளக்குக.

12. (அ) அசோகர் காலத்துக் குறும்பாறைக் கல்வெட்டுகள் பற்றி விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) இந்தியக் கல்வெட்டுகள் குறித்த ஆய்வை யார் யார்? எங்ஙனம் நிகழ்த்தினர்?

13. (அ) தென்னிந்தியக் கல்வெட்டுக்களில் குறிப்பிடத்தக்கது எது? அதன் செய்திகள் யாவை?

(அல்லது)

(ஆ) அரிக்கமேடு - கல்வெட்டு ஆய்வில் அறியப்பட்ட உண்மைகள் யாவை? வகைப்படுத்துக.

14. (அ) வட்டெழுத்துக்களின் மூன்று நிலைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) ஆதிச்சநல்லூரில் நடைபெற்ற அகழ்வாய்வு வழி கிடைக்கப்பெற்ற பொருட்கள் யாவை? விவரிக்க.

15. (அ) தமிழ் பிராமியைப் படித்தறியும் முறையை விளக்குக.

(அல்லது)

(ஆ) பல்லவர் காலத்துக் கிரந்தம் குறித்து எழுதுக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

ஏதேனும் -மூன்று வினாக்களுக்கு விரிவான விடையெழுதுக.

16. தமிழக வரலாறும் கல்வெட்டுகளும் என்ற தலைப்பில் கட்டுரை வரைக.

17. இந்தியக் கல்வெட்டாய்வு குறித்து விளக்கி வரைக.

18. தமிழ் எழுத்துக்களின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி விவரிக்க.

19. கிரந்தம் தமிழகக் கல்வெட்டுகளில் பெற்றுள்ள இடத்தைச் சான்றுகளுடன் விளக்குக.

20. கரோஷ்டி, வட்டெழுத்து இவற்றின் பழமையைக் கல்வெட்டியல் வழிநின்று விளக்கி வரைக.

| D–7361 |
|---|

| Sub. Code |
|---|
| 31931 |

DISTANCE EDUCATION

M.A. DEGREE EXAMINATION, DECEMBER 2022.

Third Semester

Tamil

சங்க இலக்கியங்கள்

(CBCS 2018-19 Academic Year Onwards)

Time : Three hours                                   Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

1. குறிஞ்சிப்பாட்டைக் கபிலர் பாடியதன் நோக்கம் யாது?

2. மருதம், நெய்தல் திணைகளுக்குரிய உரிப்பொருள் யாரு?

3. 'வாழி ஆதன்', 'வாழி அவினி' என்று ஐங்குறுநூறு குறிப்பிடும் அரசன் பெயரையும், ஊர்ப்பெயரையும் எழுதுக.

4. பகற்குறி, இரவுக்குறி என்றால் என்ன?

5. உடன்போக்கு என்றால் என்ன?

6. 'நீரின்றி அமையா உலகம் போல' என்ற உவமை மூலம் தலைவி கூறும் செய்தி யாது?

7. வையை புதுப்புனலில் நீராடச் சென்றவர்கள் யார்?

8. வையை வெள்ளம் எவற்றையெல்லாம் கவர்ந்து சென்றது?

9. கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனைப் பாடிப் பரணர் பெற்ற பரிசில் யாது?

10. நல்லியக்கோடனின் எயிற்பட்டினத்தின் சிறப்பு யாது?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) குறிஞ்சிப்பாட்டு காட்டும் தலைவன், தலைவி சிறப்பை ஆராய்க.

(அல்லது)

(ஆ) முல்லைக்கலி காட்டும் ஆயர் வாழ்வியலை விவரி?

12. (அ) ஐங்குறுநூறு காட்டும் மருதத்திணையின் ஊடல் காட்கிகளை ஆராய்க.

(அல்லது)

(ஆ) அகநானூற்றில் நெய்தல் நிலத்தின் சிறப்பினை ஆராய்க.

13. (அ) குறுந்தொகைப் பாலைப் பாடல்கள் சுட்டும் பிரிவாற்றமை குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) குறுந்தொகைப் பாலை நிலக் காட்சிகளை விவரிக்க.

14. (அ) வையை ஆற்றில் நீராடச் சென்றோர் கொண்டு சென்ற பொருள்களைப் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனின் வெற்றிச் சிறப்பை விவரி.

15. (அ) புறநானூற்றில் வன்பரணர், வல்வில் ஓரியைச் சிறப்பித்துள்ள முறையை விவரி.

(அல்லது)

(ஆ) சிறுபாணாற்றுப்படை காட்டும் கடையேழுவள்ளல்களின் சிறப்பை விவரி.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விரிவாக விடையளிக்க.

16. குறிஞ்சிப்பாட்டு காட்டும் அறத்தொடு நிற்றல் பற்றிய செய்திகளை விவரி?

17. முல்லைக்கலியில் ஆயர் ஏறுதழுவும் காட்சிகளை விளக்குக.

18. குறுந்தொகையில் பாலைப்பாடல்கள் உணர்த்தும் வாழ்வியல் செய்திகளை விளக்குக.

19. வையை ஆற்றின் சிறப்பை விவரிக்க.

20. புறநானூறு காட்டும் மன்னர்களின் சிறப்பை ஆராய்க.

| D–7362 |
|---|

| Sub. Code |
|---|
| 31932 |

DISTANCE EDUCATION

M.A. DEGREE EXAMINATION, DECEMBER 2022.

Third Semester

Tamil

காப்பியங்கள்

(CBCS 2018-19 Academic Year Onwards)

Time : Three hours                Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

1. மாதவி எதனைக் கற்றாள்? எவ்வாறு?

2. இலஞ்சி மன்றம் எத்தகையது?

3. தேவந்தி கண்ணகியை எவ்வாறு வாழ்த்தினாள்?

4. சங்கதருமன் யார்? அவனருளியது என்ன?

5. பீடிகை எங்கிருந்தது? அதன் தன்மை யாது?

6. தொடி - குறிப்பு வரைக.

7. கண்ணப்பர் இரண்டாம் கண்ணை இடந்து அப்பியது ஏன்? எங்ஙனம்?

8. சூசைக்கு விண்ணவர் செய்த நன்மை யாது?

9. நபிகள் நாயகம் உணர்த்தும் மார்க்கம் எது? அவரின் சிறப்புப் பெயர் யாது?

10. கற்பில் மகளிர் குறித்து வளையாபதி கூறுவது யாது?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) கோவலன் கண்ணகியை எங்ஙனம் புகழ்ந்துரைத்தான்?

(அல்லது)

(ஆ) காவிரியின் பெருமைகளை இளங்கோவடிகள் வழி விவரிக்க.

12. (அ) சக்கரவாளக் கோட்டத்தின் இயல்புகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) ஆபுத்திரன் யார்? அவனின் திறம் யாது?

13. (அ) சிந்தாமணி விளக்கும் ஆயர் பற்றிய குறிப்புகளைத் தொகுக்க.

(அல்லது)

(ஆ) சல்லியன் யார்? பாரதம் போரில் அவரின் பங்கினை விளக்குக.

14. (அ) சூசையின் தூய வாழ்வை விவரிக்க.

(அல்லது)

(ஆ) கண்ணப்பரின் இறையன்பை விரித்துரைக்க.

15. (அ) நபி முகம்மதுவை சீறாப்புராணம் எங்ஙனம் புகழ்ந்துரைக்கிறது?

(அல்லது)

(ஆ) மாவிந்த நகர மக்களின் சிறப்புகளை நளவெண்பா வழி விளக்குக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விரிவான விடை எழுதுக.

16. இந்திரவிழா நிகழ்வுகளை விவரிக்க.

17. பாத்திரம் பெற்ற திறத்தை விளக்குக.

18. பதுமுகன் யார்? அவன் மணந்தது யாரை? எங்ஙனம்?

19. பாலமாட்சிப்படலம் உணர்த்தும் அறக்கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

20. வளையாபதி பாடல்களால் அறியலாகும் உயர்சிந்தனைகளைத் தொகுத்தெழுதுக.

———————

| D–7363 |
|---|

| Sub. Code |
|---|
| 31933 |

DISTANCE EDUCATION

M.A. DEGREE EXAMINATION, DECEMBER 2022.

Third Semester

தமிழ்

சிற்றிலக்கியங்கள்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

1. சப்த மாதர்களின் கொடிகள் யாவை?

2. ஈமவிளக்காகப் பரணி குறிப்பிடுவது யாது?

3. குலோத்துங்கனின் சமயப்பணி குறித்து எழுதுக.

4. குருகிடம் தலைவி உரைப்பதாகக் கலம்பகம் சுட்டுவது யாது?

5. 'மன்னர் வந்து இறைஞ்சிய வடு' குறித்து எழுதுக.

6. தலைவி அன்னத்தைத் தூதனுப்பாமைக்குக் காரணம் யாது?

7. ஓடக்காண்பதும் ஒடுங்கக் காண்பதும் எவை?

8. சந்திரன் கயரோகியாகக் காரணம் யாது?

9. குறையுற உணர்தலாவது யாது?

10. 'நீர்மேல் எழுந்த நெருப்பு' - எது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) செயங்கொண்டார் காட்டும் ஊடற்காட்சிகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) குலோத்துங்கசோழன் உலாவில் இடம்பெறும் பெதும்பையின் இயல்பு குறித்து எழுதுக.

12. (அ) கன்னிக் கடுவாய் கூறுவது யாது?

(அல்லது)

(ஆ) பாணன் பெற்ற பரிசாகக் கலம்பகம் சுட்டுவதை விளக்குக.

13. (அ) 'எல்லாரும் நீயாய் இருந்தமையால்' - எனத் தமிழ்விடு தூது உரைக்குமாற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) 'பெண்கள் எல்லாம் வாழப் புரியும் தமிழ்' எனபதற்கான காரணங்களைக் குறிப்பிடுக.

14. (அ) திருக்குற்றாலத் தலச் சிறப்பினை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) மீனாட்சியின் பெருங்கருணை எனக் குமர குருபரர் குறிப்பிடுவனவற்றை எழுதுக.

15. (அ) தஞ்சைவாணனின் பெருமைகளைக் கோவை வழி எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) சோழன் பொருத களத்தின் நிலையைக் குறிப்பிடுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விரிவான விடையளிக்கவும்.

16. காடு பாடியது வழிப்புலனாகும் வறட்சிக் காட்சியை விளக்குக.

17. நந்திவர்மனின் வீரமும் ஈரமும் குறித்துக் கலம்பகவழி விவரிக்க.

18. குறத்தி குறிசொல்லும் பாங்கினை விவரி.

19. மீனாட்சியுடன் விளையாட வந்தால் சந்திரன் பெறத்தக்க நன்மைகள் குறித்து விளக்குக.

20. தஞ்சைவாணன் கோவையில் இடம்பெறும் முன்னுற உணர்தல் பகுதிக் கருத்துகளைத் தொகுத்துரைக்க.

———————

| D–7364 |
|---|

| Sub. Code |
|---|
| 31934 |

DISTANCE EDUCATION

M.A. DEGREE EXAMINATION, DECEMBER 2022.

Third Semester

Tamil

இலக்கணம் 3 — தொல்காப்பியம் - பொருளதிகாரம் - இளம்பூரணம்

(CBCS 2018-19 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

1. முதற்பொருள் என்பன யாவை?

2. "முற்படக் கிளந்த எழுதிணை" - எழுதிணைகளைக் குறிப்பிடுக.

3. வேயும் வேய்ப்புறமும் எத்திணைக்குரியது?

4. கற்பின் இலக்கணம் தருக.

5. அறிவர் எவ்வெவ்விடங்களில் கூற்று நிகழ்த்துவர்?

6. காமத்தின் சிறப்பு எப்போது தோன்றும்?

7. நகை மெய்ப்பாடு எச்சூழல்களில் பிறக்கும்?

8. அசை எத்தனை வகைப்படும்?

9. ஐவகை அடிகள் யாவை?

10. வாயுறை வாழ்த்து என்றால் என்ன?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

11. (அ) திணை மயக்கம் குறித்துத் தொல்காப்பியர் கூறுவன யாவை?

(அல்லது)

(ஆ) மதிற்போர் குறித்துத் தொல்காப்பியர் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

12. (அ) அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம் யாவை? விளக்குக.

(அல்லது)

(ஆ) பேய்த் தொடர்பான காஞ்சித்திணையின் துறைகளை விளக்குக.

13. (அ) கரணம் பற்றித் தொல்காப்பியம் குறிப்பிடுவதை விளக்குக.

(அல்லது)

(ஆ) பகற்குறி, இரவுக்குறி என்றால் என்ன? விவரிக்க.

14. (அ) தலைவியின் இயல்புகளாகப் பொருளியலில் கூறப்பட்டனவற்றைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) செய்யுளியல் கூறும் தொடையிலக்கணங்கள் குறித்து எழுதுக.

15. (அ) கலிப்பாவின் இலக்கணத்தைச் சுருக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) அடிவரையில்லாச் செய்யுட்கள் யாவை? விளக்குக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் -மூன்றனுக்கு மட்டும் விடையளிக்க.

16. அகத்திணைகளுக்குரிய முப்பொருள் பாகுபாட்டினை விளக்கியுரைக்க.

17. வாகைத் திணையின் துறைப் பாகுபாட்டினை விவரிக்க.

18. கற்பில் தலைவி கூற்று நிகழிடங்களை விரித்துரைக்க.

19. "உவமப் போலி ஐந்தென மொழிப" - வகைகளைக் எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குக.

20. மரபியல் சுட்டும் ஐவகை மரபுகளை விளக்கியுரைக்க.

| D–7365 |
|---|

| Sub. Code |
|---|
| 31941 |

DISTANCE EDUCATION

M.A. DEGREE EXAMINATION, DECEMBER 2022.

Fourth Semester

Tamil

ஒப்பிலக்கியம்

(CBCS 2018-19 Academic Year Onwards)

Time : Three hours　　　　　　Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. ஒப்பிலக்கியம் குறித்து ஆய்வு செய்த மேனாட்டறிஞர்களின் பெயர்கள் நான்கினை எழுதுக.

2. ஒப்பீடு என்னும் சொல்லை நும் பாடப்பகுதி வழி வரையறுக்க.

3. ஒப்பிலக்கியத்தின் பயன்களில் இரண்டு கூறுக.

4. அடிக்கருத்தியல் - வரையறுக்க.

5. ரஷ்ய ஒப்பிலக்கிய வளர்ச்சியில் குறிப்பிடத்தக்கவை எவை?

6. இலக்கியப் பார்வை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

7. பழந்தமிழ் இலக்கிய மொழிபெயர்ப்பாளர் நால்வரைக் குறிப்பிடுக.

8. ‘தொன்மம்’ - குறிப்பு வரைக.

9. இலக்கியங்களைப் பாடுபொருள் அடிப்படையில் எத்தனை வகையாகப் பிரிப்பர்? அவை யாவை?

10. சார்பியல் கோட்பாடு - வரையறை செய்க.

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

11. (அ) ஒப்பிலக்கியத்தின் பண்புகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) ஒப்பிலக்கியம் என்ற சொல் உருவான விதத்தைக் கூறுக.

12. (அ) ‘பிரெஞ்சுக் கோட்பாடு’ - சிறு குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) ‘அமெரிக்கக் கோட்பாடு’ - விவரிக்க.

13. (அ) ஒப்பிலக்கிய ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்ட வரலாற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) இணைநிலை இலக்கியம் அமையுமாற்றை ஆய்க.

14. (அ) ‘மொழி பெயர்ப்பு ஒரு கலை’ - இக்கூற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) இரசக் கோட்பாட்டை விளக்குக.

15. (அ) இலக்கியங்களில் உள்ளுறை உவமம் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) இலக்கியமும் சிற்பமும் எங்ஙனம் மனித மனங்களைப் பிரதிபலிக்கின்றன?

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றுக்கு விரிவான விடையளிக்க.

16. ஒப்பிலக்கியத் தோற்றம், வளர்ச்சி பற்றிக் கட்டுரை வரைக.

17. ஒப்பிலக்கிய ஆய்வும், ஆய்வாளர்களும் பற்றி விவரிக்க.

18. ஒப்பிலக்கியக் கோட்பாடுகளைத் தொகுத்து விளக்குக.

19. திருக்குறளோடு பிறமொழி நீதி இலக்கியங்களை ஒப்பிடுக.

20. ‘உளவியல் நோக்கில் பாரதி, பாரதிதாசன் பாடல்கள்’ என்ற தலைப்பில் கட்டுரை வரைக.

---

| D–7366 |
|---|

| Sub. Code |
|---|
| 31942 |

DISTANCE EDUCATION

M.A. DEGREE EXAMINATION, DECEMBER 2022.

Fourth Semester

தமிழ்

பண்பாட்டு மானிடவியல்

(CBCS 2018-19 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. இந்திய மானிடவியலின் தந்தை யார்?

2. மானிடவியல் தோன்றியது முதல் இன்றைய காலம் வரை வளர்ச்சியுற்ற நிலையை பென்னிமன் எவ்வாறு வகைப்படுத்துகிறார்?

3. உடல்சார் மானிடவியலின் வேறு பெயர் என்ன?

4. பண்பாட்டு மானிடவியலின் உட்பிரிவுகளில் தலையாய இடத்தைப்பெறுவன எவை?

5. பண்பாட்டியலார் கூறும் பண்பாட்டின் மூன்றுவகை உட்கூறுகளை எழுதுக.

6. பண்பாட்டு விழுமியங்கள் (Cultural values) என்றால் என்ன?

7. பண்பாட்டு அறுதிப்பாட்டியம் (Cultural determinism) வரையறை தருக.

8. பழங்குடி அமைப்பு எவ்வமைப்பைக் காட்டிலும் பெரியது?

9. முரட்டுப் பண்பாடு (Dionysian) பற்றி பெனிடிக்ட் கூற்றினை எழுதுக.

10. சாதிக் குழுக்கள் என்ற அடுக்கமைப்பினால் கட்டப்பட்டுள்ள சமுதாயம் எது?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

11. (அ) மானிடவியல் குறித்த சாக்கரடீஸ் கருத்துக்களை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) அரிஸ்டாட்டிலின் மானிடவியல் சிந்தனையைப் புலப்படுத்துக.

12. (அ) மனிதச் சூழலியல் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) அமெரிக்க மானிடவியலின் தன்மைகளை கூறுக.

13. (அ) இனக்குழு ஒப்பாய்வில் 'தரவுகளைப் பகுத்தாய்தல்' பெறுமிடத்தைச் சுட்டுக.

(அல்லது)

(ஆ) பண்பாட்டுக்கலவை குறித்து விளக்குக.

14. (அ) இனக்குழுச் சாதிகள் பற்றிக் கூறுக.

(அல்லது)

(ஆ) சாதி பற்றிய நவீனக் கோட்பாடுகளில் லூயி துய்மோனின் கோட்பாடு பெறுமிடத்தைச் சுட்டுக.

15. (அ) பண்பாடு வரையறை குறித்த பல்வேறு அறிஞர்களின் கருத்துக்களை வெளிப்படுத்துக.

(அல்லது)

(ஆ) இந்தியச் சாதிமுறை குறித்தெழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும்.

16. இந்தியாவில் மானிடவியலின் வளர்ச்சி குறித்து விவரிக்க.

17. இனவியல் ஆராய்ச்சி பற்றி ஆய்ந்துரைக்க.

18. "மானிடவியலின் கொள்கை சார்ந்த ஆய்வுகள் அனைத்திற்கும் அடித்தளமாக விளங்குவது ஒப்பீட்டு முறை" என்பார் கூற்றை நிறுவுக.

19. பண்பாடும் ஆளுமையும் பற்றி விவரிக்க.

20. ஹோகார்ட்டின் சாதி பற்றிய கோட்பாட்டினை மதிப்பிடுக.

———————

| D–7367 |
|---|

| Sub. Code |
|---|
| 31943 |

DISTANCE EDUCATION

M.A. DEGREE EXAMINATION, DECEMBER 2022.

Fourth Semester

Tamil

தமிழக வரலாறும் பண்பாடும்

(CBCS 2018-19 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. தமிழகத்தை வளம் கொழிக்கச் செய்யும் ஆறுகளின் பெயர்களைக் கூறுக.

2. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் எத்தனை வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது?

3. சேரன் செங்குட்டுவனின் அருஞ்செயல்களைக் குறிப்பிடுக.

4. களப்பிரர் வரலாற்றை அறிய உதவும் இலக்கியச் சான்றுகளைக் கூறுக.

5. உப்புச் சத்தியாகிரகம் குறித்து எழுதுக.

6. ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்த புலித்தேவன் பற்றிக் கூறுக.

7. வைணவ ஆழ்வார்களின் பெயர்களை எழுதுக.

8. சமணர்களின் உயர் கொள்கைகளை விளக்குக.

9. பௌத்த நூலான மணிமேகலை பற்றிக் குறிப்பு வரைக.

10. சங்க கால இசைக் கருவிகளின் பெயர்களைக் கூறுக.

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

11. (அ) சங்க காலச்சோழ மன்னர்களின் ஆட்சிச் சிறப்பினை எழுதுக.

(அல்லது)

(ஆ) சங்க காலக் கல்வி நிலை குறித்தெழுதுக.

12. (அ) சோழர்களின் கடல் வணிகம் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) வெளி நாட்டுப் பயணிகள் கண்ட பாண்டிய நாடு பற்றிக் கூறுக.

13. (அ) தஞ்சை நாயக்கர் மன்னர்கள் குறித்து எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) தமிழகத்தில் விடுதலைப் போராட்டம் ஏற்படக் காரணங்கள் யாவை?

14. (அ) தமிழ்ப் பண்பாட்டில் கிறித்தவம் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) தமிழக நாடகக் கலை வளர்ச்சி பற்றிக் கூறுக.

15. (அ) ஆங்கிலேயர் ஆட்சியில் தமிழகத்தின் சமூகப் பொருளாதார நிலையினை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) தமிழக ஆற்றங்கரை நாகரிகங்கள் வழி அறியலாகும் செய்திகளைச் சுட்டுக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும்.

16. பண்டைத் தமிழகத்திற்கும் சிந்துவெளி நாகரிகத்திற்குமுரிய தொடர்புகளை ஆய்ந்துரைக்க.

17. பல்லவர் கலைத் தொண்டினை மதிப்பிடுக.

18. தமிழகத்தில் மராட்டியர் ஆட்சியின் சிறப்பினைப் புலப்படுத்துக.

19. தமிழகப் பண்பாட்டில் இசுலாம் எனும் தலைப்பில் கட்டுரை வரைக.

20. தமிழ் நாட்டுச் சிற்பக்கலை குறித்து ஆராய்க.

| D–7368 |
|---|

| Sub. Code |
|---|
| 31944 |

DISTANCE EDUCATION

M.A. DEGREE EXAMINATION, DECEMBER 2022.

Fourth Semester

Tamil

ஆராய்ச்சி அறிமுகம்

(CBCS 2018-19 Academic Year Onwards)

Time : Three hours    Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

1. ‘ஆய்தல்’ என்பதற்குத் தொல்காப்பியர் தரும் விளக்கம் யாது?

2. ஆய்வினை எத்தனை வகைகளாகப் பாகுபடுத்துவர்?

3. முனைவர்பட்ட ஆய்வுக்கால எல்லையைக் குறிப்பிடுக.

4. வீரநிலைக் காலச் செய்யுள் என்னும் ஆய்வு நூலை எழுதியவர் யார்?

5. நேர்காணல் உத்திகள் இரண்டினைச் சுட்டுக.

6. வினாநிரலுக்கும் பட்டியலுக்குமுள்ள வேறுபாட்டினைத் தருக.

7. ஆண்டு, பக்க எண்கள் குறிக்கப்டாத நூல்களை அடிக்குறிப்பிடுவது யாங்ஙனம்?

8. அறிவியல் ஆய்வின் பயன்கள் இரண்டினைச் சுட்டுக.

9. ஆய்வுச் சிக்கல் என்பதன் பொருள் தருக.

10. தேர்ந்தமை துணைநூற் பட்டியல் என்றால் என்ன?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

<u>அனைத்து</u> வினாக்களுக்கும் விடையளிக்க.

11. (அ) இலக்கிய ஆய்வின் பயன் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) ஆய்வுச் சிக்கலைத் தெரிவு செய்யும் விதத்தினை விளக்குக.

12. (அ) ஆய்வு வகைகளைக் காட்டுகளுடன் விரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) உற்று நோக்குவார் கடைப்பிடிக்கத்தக்க அணுகுமுறைகள் யாவை?

13. (அ) கள ஆய்வு என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) கள ஆய்வு முறைகள் குறித்து எழுதுக.

14. (அ) ஆய்வறிக்கை எழுதுதலின் படிநிலைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) வினாநிரலின் நோக்கமும் தேவையும் பற்றிச் சுட்டியுரைக்க.

15. (அ) ஆய்வேட்டில் துணைநூற்பட்டியலின் தேவை குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) ஆய்வேட்டின் புறக்கட்டமைப்பில் பின்னிணைப்புகள் பயன் குறித்து எழுதுக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் -மூன்றனுக்கு மட்டும் விடையளிக்க.

16. இருபதாம் நூற்றாண்டு தமிழ் ஆய்வுப் போக்கினை மதிப்பிடுக.

17. சங்க இலக்கிய ஆய்வுப் பொருண்மைகள் குறித்து விவரிக்க.

18. நேர்காணலின் வகைகளை விரித்துரைக்க.

19. ஆய்வேட்டு ஆதாரங்கள் திரட்டும் வழிமுறைகள் பற்றி விளக்கியுரைக்க.

20. மேற்கோளிடும் முறைகளைச் சான்றுகளுடன் விளக்குக.

———————